**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No.49/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW1 | | Examined as : PW1 | |
| Name | : ஜீவா | Defence | : |
| Husband Name | : சண்முகம் | Court | : |
| Village | : தலைச்சங்காடு | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 37 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 16.02.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை : –

நான் தலைச்சங்காட்டில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 14.06.2021 ஆம் தேதி தர்மகுளத்தில் எனது தம்பி வீடு கட்டி குடிபோகும் விழாவிற்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். மீண்டும் 16.06.2021 ஆம் தேதி எனது தம்பி வீட்டிற்கு சென்று அங்கேயே இரவு தங்கிவிட்டேன். மறுநாள் 17.06.2021 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் தலைச்சங்காட்டில் உள்ள எனது வீட்டிற்கு வந்தபோது எனது வீட்டின் நிலைக்கதவு உடைந்திருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது இரண்டு வீட்டின் அறையின் கதவுகளும் உடைந்திருந்தது. வீட்டில் இருந்த இரண்டு பீரோக்களும் உடைந்த நிலையில் காணப்பட்டது. பீரோவில வைக்கப்பட்டிருந்த நகைகள் காணவில்லை. அவை மொத்தம் 46 சவரன் ஆகும். அதன் மதிப்பு சுமார் 8 லட்சம் ஆகும்.

உடனடியாக பதற்றத்துடன் எனது கணவர் வெளிநாட்டில் இருந்ததால் உள்ளூரில் உள்ள எனது நாத்தனாருக்கும் தொலைபேசியில் தகவலை தெரிவித்தேன். உடனே அவரும் எனது வீட்டிற்கு வந்துவிட்டார். மற்றும் ஊர்காரர்களும் அந்த இடத்தில் குவிந்துவிட்டனர். பின்னர்

ஊர்க்காரர்கள் போலீசுக்கு தகவல் கொடுத்தஉடன் போலீசார் எனது வீட்டிற்கு வந்து ஆய்வு செய்தனர். காணாமல் போன நகைகளின் விபரம் 5 பவுன் ஆரம் இரண்டு, 5 பவுன் வளையல் ஒன்று. 5 பவுன் தாலி செயின் ஒன்று, 3 பவுன் ஆரம் ஒன்று., 2 –1/2 பவுன் அட்டிகை, 2–1/2 பவுன் J இன்ஸியல் போட்ட டாலர் செயின் ஒன்று. மீன் டாலர் செயின் 2–1/2 பவுன் ஒன்று. ஓம் டாலர் செயின் ஒன்று. 3 பவுன் வளையல் ஒன்று. கல் தோடு தொங்கல் 1 பவுன் ஒன்று. கல்தோடு 1/2 பவுன் ஒன்று. ஜிமிக்கி 1 பவுன், பூத்தோடு 1 பவுன் ஒன்று. மற்றொரு பூத்தோடு 1/2 பவுன் ஒன்று. சைடு மாட்டல் 1 பவுன் ஒன்று. குண்டு மாட்டல் 2 செட். உதிரி நகைகள் 2–1/2 பவுன். கை மோதிரம் 2, மற்றும் கல் மோதிரம் 1. ஆக மொத்தம் கூடுதல் 46 பவுன், அதன் மதிப்பு 8 லட்சம் ஆகும்.

வீட்டில் திருடு போன நகைகளை கண்டுபிடித்து தர காவல் நிலையத்தில் 17.06.2021 ஆம் தேதி புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் கடந்த வருடம் 16.12.2022 ஆம் தேதி போலீசார் எனது வீட்டில் உள்ள நகையை திருடியவரை பிடித்து வைத்திருப்பதாக கூறினார்கள். நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று எனது நகைகளை அடையாளம் காட்டினேன். போலீசார் எனது நகைகளை திருடியவரை எனக்கு காட்டினார்கள். அவர்தான் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் எதிரியாவார். எனது வீட்டிலிருந்து திருடிய நகைகளை போலீசார் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். நான் அதனை இடைநிலை மனு செய்து பெற்றுக்கொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நான் பெற்றுக்கொண்ட நகைகளின் புகைப்பட நகல்கள் **(எண்ணிக்கை 4) அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>–**

இன்றைய தினம் செம்பனார்கோவில் போலீசாரை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். இன்று எதிரியை போலீசார் அடையாளம் காண்பித்தாரா என்றால் காண்பித்தார். போலீசாரின் 16.12.2022 தேதியிட்ட மறு விசாரணையில் நான் வீட்டில் சென்று பார்த்தபோது காணாமல் போனதாக கொடுத்த நகைகளில் 5 தலா பவுன் எடையுள்ள 2 ஆரம், 5 பவுன் எடையுள்ள 1 வளையல், 5 பவுன் எடையுள்ள 1 தாலி செயின், 1 பவுன் தோடு, 1 பவுன் மோதிரங்கள் 2, 1–1/2 பவுன் ஓம் என்ற டாலர் செயின் 1, இவைகள் மட்டுமே காணாமல் போயிருந்தது. மற்ற நகைகள் வேறொரு பேக்கில் தனியாக வைக்கப்பட்டிருந்தது என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை.

போலீசாருக்கு தொலைபேசி மூலம் தகவல் சொல்லி சுமார் 2 மணிநேரத்திற்கு பிறகுதான் போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் கைரேகை நிபுணர் மற்றும் மோப்ப நாயுடன் அங்கு வந்து விசாரித்தார்கள். நான் குடியிருக்கும் வீட்டிற்கு எதிரி புறத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென் புறத்தில் 2 காலி மனைகள் உள்ளது. அதனை அடுத்துதான் அழகேசன் வீடு உள்ளது. எனது வீட்டிற்கு அருகில் குடியிருப்பவர்களான தையல்நாயகி, தங்கராசு, ஆறுமுகம், அழகேசன், வீரமணி ஆகியோர்களை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். மேற்படி நபர்களை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரை செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் உள்ள உதவி ஆய்வாளர் தான் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்.

எதிரியை போலீசார் அடையாளம் காண்பித்ததன் அடிப்படையில் தான் எனக்கு எதிரியை தெரியும் என்றால் சரிதான். நான் எனது உறவினர் வீட்டின் விஷேசத்திற்காக சென்றபோது எனது நகைகளை இரண்டு பைகளில் எடுத்து சென்றேன் என்றாலும் அதை வேறு எங்கோ தொலைத்துவிட்டு வீட்டிலிருந்து யாரோ திருடியாக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு போலீசார் வந்து புகைப்படம் எடுக்க வில்லை என்றாலும். கைரேகை நிபுணர் வந்து எந்த கைரேகை பதிவையும் எடுக்க வில்லை என்றாலும்

சரியல்ல. போலீசார் இன்னைய தினம் எதிரியை எனக்கு அடையாளம் காண்பித்ததால் தான் எனக்கு எதிரியை தெரியும் என்றால் சரியல்ல.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No.49/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW2 | | Examined as : PW2 | |
| Name | : பாலகிருஷ்ணன் | Defence | : |
| Father Name | : சந்திரகாசு | Court | : |
| Village | : தலைச்சங்காடு | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 51 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 16.02.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை : –

நான் தலைச்சங்காட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அசா1 யை எனக்கு தெரியும், அவர் தலைச்சங்காட்டில் குடியிருந்து வருகிறார். அவரது வீடு 350 மீட்டர் தொலைவில் உள்ளது. அசா1 ஜீவா வீட்டின் வழியாக போவதும் வருவதும் பழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது தெரியுமா என்றால் திருட்டு நடந்த அன்று நான் வயலுக்கு சென்றுவிட்டேன். பின்னர் கேள்விப்பட்டு அங்கு வந்து பார்த்தேன். அப்போது போலீசார் அங்கு வந்து திருட்டு நடந்தது சம்பந்தமாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அங்கு என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. போலீசார் விசாரணையில் கடந்த 17.06.2021 ஆம் தேதி

காலை 09.00 மணியளவில் ஜீவா வீட்டிற்கு வந்து பார்த்தபோது ஜீவா வீடு உடைக்கப்பட்டிருந்தும் வீட்டில் உள்ள பொருட்கள் கலைந்தும் இருந்தது. பீரோவில் வைக்கப்பட்டிருந்து 46 பவுன் நகைகள்மதிப்பு ரூ8 லட்சம் நகைகள் திருடு போயிருந்தது என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணத்தினால் சம்பவம் பற்றி தெரியாது என்றும் கேள்விப்பட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No.49/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW4 | | Examined as : PW3 | |
| Name | : சுரேஷ்குமார் | Defence | : |
| Father Name | : ராஜாராமன் | Court | : |
| Village | : தலைச்சங்காடு | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 37 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 16.02.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை : –

நான் தலைச்சங்காட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அசா1 யை எனக்கு தெரியும், அவர் தலைச்சங்காட்டில் குடியிருந்து வருகிறார். அவரது வீடு எனது வீட்டிலிருந்து எதிர் திசையில் 4 வீடுகள் தள்ளி உள்ளது. அசா1 ஜீவா வீட்டின் வழியாக போவதும் வருவதும் பழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது தெரியுமா என்றால் திருட்டு நடந்த அன்று நான் வயலுக்கு சென்றுவிட்டேன். பின்னர் கேள்விப்பட்டு அங்கு வந்து பார்த்தேன். அப்போது நானும் , ராஜாங்கம், மணிகண்டபிரபு, பாலகிருஷ்ணன் ஆகியோர் இரவு நேரம் ஜீவா வீட்டிற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் என்னை விசாரித்ததாக

சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் கடந்த 17.06.2021 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் ஜீவா வீட்டிற்கு வந்து பார்த்தபோது ஜீவா வீடு உடைக்கப்பட்டிருந்தும் வீட்டில் உள்ள பொருட்கள் கலைந்தும்  இருந்தது. பீரோவில் வைக்கப்பட்டிருந்து 46 பவுன் நகைகள்மதிப்பு ரூ8 லட்சம் நகைகள் திருடு போயிருந்தது என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணத்தினால் சம்பவம் பற்றி தெரியாது என்றும் கேள்விப்பட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No.49/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW6 | | Examined as : PW4 | |
| Name | : ஆறுமுகம் | Defence | : |
| Father Name | : பெருமாள் | Court | : |
| Village | : தலைச்சங்காடு | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 56 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 16.02.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை : –

நான் தலைச்சங்காட்டில் குடியிருந்து மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். வழக்கம்போல் அண்ணப்பன்பேட்டையில் மளிகை கடை திறப்பதற்காக நான் சென்றுவிட்டேன். எனது பக்கத்து வீட்டில வசிக்கும் ஜீவா வீட்டில திருட்டுபோனது தொடர்பாக கேள்விப்பட்டு நான் வந்து பார்த்தபோது போலீசார் ஜீவா வீட்டிற்கு வந்து விசாரித்துக்கொண்டிருந்தனர். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் எனது கையொப்பம் எதுவும் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையில் கடந்த 17.06.2021 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் ஜீவா வீட்டு வாசலில் போலீசார் டார்ச் லைட் உதவியுடன் அவரது வீட்டையும், சுற்றி உள்ள

வீடுகளையும் விசாரித்து அதன் விபரங்களை குறித்துக்கொண்டார்கள் என்றும் வரைபடமாக வரைந்துகொண்டார்கள் என்றும், அதற்கு சாட்சியாக நானும், கண்ணன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணத்தினால் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று போலீசார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.</u>**